**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**CC.NO- 61/2024**

**Dated :10.02.2026**

**Deposition of witness for : P.W.1**

**List of Witness LW1 Examined as PW1 (Defacto Complainant )**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்லக்கண்ணு | வயது | : | 70 |
| கணவர் பெயர் | : | சைவராஜ் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | வடுக்கப்பட்டி | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜர்)

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி எனது மருமகன் ஆவார். எனது இரண்டாவது மகளான சாட்சி லதா என்பவரை எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்தோம். அவர்களுக்கு இரண்டு மகள்கள் உள்ளார்கள். அதில் மூத்த மகளை, எனது இரண்டாவது மகனுக்கு திருமணம் செய்து வைத்தோம், அவர்களுக்கு ஒரு பெண் குழந்தையும் ஒரு ஆண் குழந்தையும் உள்ளது. அவர்களுக்கு இடையே ஏற்பட்ட கருத்து வேறு பாடு காரணமாக அவர்களது குழந்தைகள் என் வசம் இருந்தார்கள். அதனால், எதிரியின் மூத்த மகள் லாவண்யா குழந்தைகளை கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். நாங்கள் நீதிமன்றத்திற்கு சென்ற போது, எதிரி எங்களை சுட்டுவிடுவேன் என்று மிரட்டினார். கடந்த 25.11.2022 ஆம் தேதி, பேருந்து மூலமாக புதுக்கோட்டையிலிருந்து கந்தர்வக்கோட்டைக்கு வந்து, கந்தர்வக்கோட்டையில் இருந்து பேருந்தில், வடுகப்பட்டி சென்று, அங்கு பேருந்து நிறுத்தத்தில், இறங்கி, நானும் எனது கணவர்,

எனது மகள் லதா, மகன் முருகேசன் மற்றும் பேத்தி காவியா ஆகியோர் நடந்து சென்று கொண்டிருந்தோம்.

2) அப்போது, எதிரியானவர் எனது கணவரை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுவிட்டார். அது சம்மந்தமாக வழக்கு, புதுக்கோட்டை நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. சுமார் 1 1/2 வருடங்களுக்கு முன்பு, இரவு 07.30 மணியளவில், நான் எனது வீட்டில் இருந்த போது, எதிரி புல்லட்டில் அங்கு வந்து, யார் வீட்டில் இருப்பது, தேவுடியாவே வெளியே வாருங்கள், புதுக்கோட்டை நீதிமன்றத்தில் நடந்து வரும் வழக்கில், யாரேனும் எனக்கு எதிராக சாட்சி சொன்னால், அரிவாளால் வெட்டி கொன்று விடுவேன் என மிரட்டினார். ஏன் இப்படி பேசுகிறாய் என்று நான் எதிரியை பார்த்து கேட்ட போது, எதிரி, உனது கணவரைக் கொன்றவாறு உன்னையும் கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். எனது மகன் மற்றும் மகள் வந்தவுடன் அவர்களிடம் நடந்த விபரத்தை சொல்லி அழுதேன். எனக்கு உயிர்பயம் ஏற்பட்டதால், கந்தர்வக்கோட்டை காவல் நிலையம் சென்று, நடந்த சம்பவம் குறித்து புகார் மனு அளித்தேன்.

தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். இந்த புகார் மனு நான் கொடுத்தது தான். **(மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலிசார் என்னை விசாரித்தார்கள்.**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜரில் இருந்தார். எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.02.10 15:59:54 +0530

**நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**CC.NO- 61/2024**

**Dated :10.02.2026**

**Deposition of witness for : P.W.2**

**List of Witness LW2 Examined as PW2 (Hearsay Witness )**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : லதா | | வயது | : | 55 |
| கணவர் பெயர் | : ரவிச்சந்திரன் | | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : வடுக்கப்பட்டி | | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜர்)

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி எனது கணவர் ஆவார். அ.சா.1 எனது அம்மா ஆவார். எனக்கும் எதிரிக்கும் 1997 ஆம் ஆண்டு, திருமணம் ஆகி, கந்தர்வக்கோட்டை பெருமாள் கோவில் தெருவில் வசித்து வந்தோம். எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளார்கள். எனது மூத்த மகள் லாவண்யா என்பவரை எனது இளைய சகோதரர் பாரதிராஜா என்பவருக்கும் திருமணம் முடித்து கொடுத்தேன். அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை, ஒரு பெண் குழந்தை உள்ளார்கள். எனக்கும் எதிரிக்கும் இடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டு, நான் எனது அம்மா வீட்டிற்கு வந்துவிட்டேன். எனது மூத்த மகள் லாவண்யா மட்டும் எதிரியுடன் இருந்தார். லாவண்யாவின் குழந்தைகள் எங்களிடம் இருந்தார்கள். அவர்களை கேட்டு, லாவண்யா நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். கடந்த 25.11.2022 ஆம் தேதி, அந்த வழக்கில் ஆஜராக புதுக்கோட்டை நீதிமன்றத்திற்கு சென்றோம். அன்றைய தினம் நீதிமன்றம் சென்றுவிட்டு, திரும்பி பேருந்து மூலமாக, புதுக்கோட்டையிலிருந்து கந்தர்வக்கோட்டைக்கு வந்து, கந்தர்வக்கோட்டையில் இருந்து

பேருந்தில், வடுகப்பட்டி சென்று, அங்கு பேருந்து நிறுத்தத்தில், இறங்கி, நானும் எனது அம்மா அ.சா.1, எனது பேத்தி காவியா, எனது அப்பா சைவராஜ் ஆகியோர் நடந்து சென்று கொண்டிருந்தோம்.

2) அப்போது, மாலை சுமார் 6.45 மணியளவில், எதிரியானவர் தெற்கு புறம் இருந்த புதரில் இருந்து, கருப்பு பேண்ட், கருப்பு சட்டை போட்டுக்கொண்டு, எதிரியானவர் எனது அப்பாவை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுவிட்டார். அது சம்மந்தமாக கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கானது புதுக்கோட்டை நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. கடந்த 29.07.2024 ஆம் இரவு 07.30 மணியளவில், அ.சா.1 வீட்டில் இருந்த போது, எதிரி புல்லட்டில் அங்கு வந்து, தேவுடியாவே வெளியே வாருங்கள், புதுக்கோட்டை நீதிமன்றத்தில் நடந்து வரும் வழக்கில், யாரேனும் எனக்கு எதிராக சாட்சி சொன்னால், அரிவாளால் வெட்டி கொன்று விடுவேன் என்றும் யாரும் எனக்கு எதிராக சாட்சி சொல்லக்கூடாது என்று மிரட்டிச் சென்றுள்ளார். அப்போது நானும் எனது தம்பி முருகேசனும் கந்தர்வக்கோட்டை சென்றிருந்தோம். பின்னர் நாங்கள் வீட்டிற்கு வந்த போது, அ.சா.1 நடந்த விபரங்களை எங்களிடம் கூறி அழுதார். இரவு நேரத்தில் காவல் நிலையம் செல்ல முடியாது என்பதற்காக மறுநாள் 30.07.2024 ஆம் தேதி, மதியம் 02.00 மணியளவில் கந்தர்வக்கோட்டை காவல் நிலையம் சென்று அ.சா.1 புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்த விபரங்களை சொன்னேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜரில் இருந்தார். எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.02.10 16:00:13 +0530

நா.சிவபழனி,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**<u>CC.NO- 61/2024</u>**

**Dated :10.02.2026**

**Deposition of witness for : P.W.3**

**List of Witness LW3 Examined as PW3 (Hearsay Witness )**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகேசன் | வயது | : | 47 |
| தந்தை பெயர் | : | சைவராஜ் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | வடுக்கப்பட்டி | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜர்)

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி எனது அக்காவின் கணவர் ஆவார். அ.சா.1 எனது அம்மா ஆவார். அ.சா.2 எனது அக்கா ஆவார். கடந்த 25.11.2022 ஆம் தேதி, எனது அக்கா மகள் லாவண்யா குழந்தைகளை கேட்டு தாக்கல் செய்திருந்த, வழக்கில், ஆஜராக புதுக்கோட்டை நீதிமன்றத்திற்கு சென்றோம். நீதிமன்றத்திலேயே எனது அப்பாவிற்கும் எதிரிக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அன்றைய தினம் நீதிமன்றம் சென்றுவிட்டு, திரும்பி பேருந்து மூலமாக, புதுக்கோட்டையிலிருந்து கந்தர்வக்கோட்டைக்கு வந்து, கந்தர்வக்கோட்டையில் இருந்து பேருந்தில், வடுகப்பட்டி சென்று, அங்கு பேருந்து நிறுத்தத்தில், இறங்கி, நானும் எனது அம்மா அ.சா.1, எனது அக்கா அ.சா.2 லதா, எனது தம்பி மகள் காவியா, எனது அப்பா சைவராஜ் ஆகியோர் நடந்து சென்று கொண்டிருந்தோம்.

2) அப்போது, மாலை சுமார் 06.45 மணியளவில், எதிரியானவர் தெற்கு புறம் இருந்த புதரில் இருந்து, எதிரியானவர் எனது அப்பாவை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுவிட்டார். அது

சம்மந்தமாக கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கானது புதுக்கோட்டை நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. கடந்த 29.07.2024 ஆம் இரவு 07.30 மணியளவில், அ.சா.1 வீட்டில் இருந்த போது, எதிரி புல்லட்டில் அங்கு வந்து, தேவுடியாவே வெளியே வாருங்கள், புதுக்கோட்டை நீதிமன்றத்தில் நடந்து வரும் வழக்கில், யாரேனும் எனக்கு எதிராக சாட்சி சொன்னால், அரிவாளால் வெட்டி கொன்று விடுவேன் என்றும் யாரும் எனக்கு எதிராக சாட்சி சொல்லக்கூடாது என்று மிரட்டிச் சென்றுள்ளார். அப்போது நானும் எனது அக்கா லதாவும் கந்தர்வக்கோட்டை சென்றிருந்தோம். பின்னர் நாங்கள் வீட்டிற்கு வந்த போது, அ.சா.1 நடந்த விபரங்களை எங்களிடம் கூறி அழுதார். இரவு நேரத்தில் காவல் நிலையம் செல்ல முடியாது என்பதற்காக மறுநாள் 30.07.2024 ஆம் தேதி, ல் கந்தர்வக்கோட்டை காவல் நிலையம் சென்று அ.சா.1 புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்த விபரங்களை சொன்னேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜரில் இருந்தார். எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.02.10 16:00:25 +0530

**நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**